# வினைமுற்று

- ஒரு பொருள் செய்த தொழிலைக் குறித்து வந்து முற்றுப் பெற்ற சொல் வினைமுற்று எனப்படும்.
- அது திணை, பால், எண், இடம், காலம் காட்டும் பயனிலையாக வரும்.
- வேற்றுமை உருபை ஏற்காது.

பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்
பொறுத்தாரைப் பொன்போல் வைப்பர்

ஏறுமின், வைப்பர் ஆகியவை வினைமுற்றுகள்

வினைமுற்று இரு வகைப்படும்

1) தெரிந்லை வினைமுற்று
2) குறிப்பு வினைமுற்று
3) உடன்பாடு வினைமுற்று
4) எதிர்மறை வினைமுற்று
5) ஏவல் வினைமுற்று
6) வியங்கோள் வினைமுற்று

**1) தெரிநிலை வினைமுற்று**

செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறனையும் தெரிவித்துக் காலத்தே வெளிப்படையாகக் காட்டுவது தெரிநிலை வினைமுற்று

எ.கா. உழவன் நிலத்தை உழுகிறான்

இத்தொடரில் உழுகிறான் என்பது வினைமுற்று

இது உழுதல் என்னும் தொழிலைக் காட்டுவதோடு செய்பவன். கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகியவற்றையும் தெரிவிக்கின்றது.

உழவன் - செய்பவன் (உழுதவன்)
ஏர் மாடுகள் - கருவி
வயல் - இடம் (நிலம்)
உழுதல் - செயல் (தொழில்)
உழுகிறான் - காலம் (நிகழ்காலம்)
வயல் புழுதியால் - செய்பொருள்

"செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே"
நன்னூல் - 320

- **குறிப்பு வினைமுற்று**

- செய்பவனையும், திணை, பால்களையும் வெளிப்படையாக காட்டிக் காலத்தைக் குறிப்பாக உணர்த்தும் வினைமுற்று குறிப்பு வினைமுற்று எனப்படும்.
- இவ்வினைமுற்று பொருள், இடம் முதலான ஆறின் அடிப்படையில் தோன்றும்.

குறிப்பு வினைமுற்று ஆறுவகைப் பெயர்களின் அடிப்படையில் பிறக்கும்.

அவன் பொன்னன் - பொன்னன் உடையவன் - பொருள்
அவன் விழுப்புரத்தான் - விழுப்புரத்தில் வாழ்பவன்-இடம்
அவன் சித்திரையான் - சித்திரையில் பிறந்தவன் - காலம்
அவன் கண்ணன் - கண்களை உடையவன் - சினை
அவன் நல்லவன் - நல்ல இயல்புகளை உடையவன் - குணம்
அவன் உழவன் - உழுதலைச் செய்பவன் - தொழில் அவன் என்னும் எழுவாய்க்கு பயனிலையாய் வந்த 'பொன்னன்' என்பதே குறிப்பு வினையாகும். பொன்னை உடையவனாய் இருந்தான், இருக்கின்றான், இருப்பான் எனப் பொன்னன் என்பது முக்காரத்தையும் குறிப்பாக உணர்த்துகிறது.

"பொருள் முதல் ஆறினுக் தோற்றிமுன் ஆறனுன் வினை முதல் மாத்திரை விளக்கல் வினைக்குறியே"
நன்னூல் - 321

- **உடன்பாட்டு வினைமுற்று**

செயல் நிகழ்வதைக் காட்டும் வினைமுற்று எதிர்மறை வினைமுற்று

# வினைமுற்று

எ.கா: தொடுத்தான், செலவீர், செல்லுக, செய்வர், கொடுத்தான்

➢ **எதிர்மறை வினைமுற்று**

செயல் நிகழாமையைக் குறிக்கும் வினைமுற்று எதிர்மறை வினைமுற்று

எ.கா: தொடுத்திலன், செல்லாதீர், சொல்லற்க, செய்யார், பறித்திலன்

1. சிறிது அலாப் பொழுது - இருஎதிர்மறை ஓர் உடன்பாட்டில் வந்தது.

➢ **ஏவல் வினைமுற்று**

- முன்னிலை இடத்தில் கட்டளைப் பொருளில் எதிர்காலம் காட்டி வரும் வினைமுற்று எனப்படும்.
- ஒருமை பண்மை உணர்த்தும்
  எ.கா: வாராய், வாரீர்
- ஏவல் உருமை வினைமுற்றகள இ, ஆ, ஆய் என்னும் விகுதிகளைப் பெறும்.
  எ.கா: வருதி, செவ்வாய்
- ஏவல் பன்மை வினைமுற்றுகள் இர், ஈர், மின், உம் என்னும் விகுதிகளைப் பெறும்.
  எ.கா: வருவீர், வம்மீன், வாரும்
  நீ, நட, நீபோ, நீ படி – விகுதி பெறாத ஏவல் ஒருமை வினைமுற்று

➢ **வியங்கோள் வினைமுற்று**

- வேண்டல், விதித்தல், வாழ்த்துதல், வைதல், முதலிய பொருள்களில் மூவிடங்களிலும் ஐம்பால்களிலும் வரும் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று எனப்படும்.
- இது ஒருமைக்கும் பண்மைக்கும் பொதுவாக வரும்.

**எ.கா:**

வாழ்க - வாழ்த்துதல்
ஒழிக - ஒழித்தல்
செல்க - விதித்தல்
ஈக - வேண்டல்
வாழிய, வாழ்யர் - வாழ்த்துதல்

**வியங்கோள் வினைமுற்று**

- விளம்பக் கேள் - பொருளைச்செய்க
- போற்றி - காக்க
- கழிக்க - ஒக்க
- வருக - வாழி
- வருக - தருக
- கெடுக - விடல்
- செல்லுக - இளைப்பாறுக
- தீமைத்து - ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று
- தீர்கிலேன் - தன்மை ஒருமை வினைமுற்று
- செய்குவென் - தன்மை ஒருமை வினைமுற்று
- நெகிழ விடேன் - தன்மை ஒருமை எதிர்மறை வினைமுற்று
- அறைகுவான் - தன்மை ஒருமை எதிர்கால வினைமுற்று
- அல்லோம் - தன்மைப் பன்மை வினைமுற்று
- கழித்தோம் - தன்மைப் பன்மை நிகழ்கால வினைமுற்று
- களைந்தோம் - தன்மைப் பன்மை நிகழ்கால வினைமுற்று
- இளைப்பாறுவம் - உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று
- செய்தற்கு அரிய செயல் - அல்லீற்று வியங்கோள் வினைமுற்று
- தேர்ந்து கொளல் - ‘அல்’லீற்று உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று
- ஓம்பப்படும் - ‘செய்யும்’ என்னும் வாய்பாட்டு

# வினைமுற்று

வினைமுற்று

- குன்றக்கெடும் - 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று
- இடும்பை தரும் - 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று
- கூறும் - 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று
- அழைத்தி - ஏவல் வினைமுற்று
- இருத்தி - ஏவல் வினைமுற்று
- முன்னே காட்டும் - ஏவல் பன்மை வினைமுற்று
- இல்லை - குறிப்பு வினைமுற்று
- பொருநகர் பேரும் - குறிப்பு வினைமுற்று தகைத்து
- செயக்கிடந்தது இல் - குறிப்பு வினைமுற்று
- பொருளல்லது இல்லை - குறிப்பு வினைமுற்று
- வாரீர் - முன்னிலைப் பன்மை பலர்பால் வினைமுற்று
- அருளுதிர் - முன்னிலைப்பன்மை வினைமுற்று
- எய்துவர் - எதிர்காலப் பலர்பால் வினைமுற்று
- சூழ்வார் - பலர்பால் வினைமுற்று, முற்றெச்சமும் ஆகும்
- அமிழ்தினும் சீர்த்த - பலவின்பால் வினைமுற்று
- உவப்ப கொணர்ந்த - பலவின்பால் இறந்தகால (கொண்டுவரப்பட்டன) வினைமுற்று
- வீழ்ந்தான் - ஆண்பால் வினைமுற்று
- வாகீசர் கண்டார் - பலர்பால் வினைமுற்றுகள் உயர்வுப்பன்மையாய் வந்தது
- அப்பூதியடிகள் பூண்டார் - பலர்பால் வினைமுற்றுகள் உயர்வுப்பன்மையாய் வந்தது
- பாற்றுவித்தார் - பிறவினை பலர்பால் வினைமுற்று
- எள்ளுவர், செய்வர் - படர்க்கை பலர்பால் வினைமுற்று
- ஒல்லா - அஃறிணை எதிர்மறை பன்மை வினைமுற்று
- அவன் உதவான் - எதிர்மறை ஆண்பால் வினைமுற்று
- கொடுக்கும் தகைமையவர் யார்
  - வினாவினைக் குறிப்பு முற்று
  - விளாவினைக் குறிப்பு முற்று
- யார்

  "கயவொடு ரவ்வொற்று ஈற்ற வியங்போளட
  இயலும் இடம்பால் எங்கும் என்ப"
  நன்னூல் - 338

**ஏவல், வியங்கோள் வினைமுற்றுகள் வேறுபாடுகள்**

| வ.எண். | ஏவல் வினைமுற்று | வியங்கோள் வினைமுற்று |
|---|---|---|
| 1 | கட்டளைப் பொருள்களின் மட்டும் வரும் | வாழ்த்துதல், வைதல், வேண்டுதல், விதித்தல், என்னும் நான்கு |
| 2 | முன்னிலையில் மட்டும் வரும் | பொருள்களில் வரும் |
| 3 | ஒருமை பண்மை பாகுபாடு உண்டு (எ.கா) செல்வாய் | இருதிணை, ஐம்பால், மூவிடத்தும் அமையும்<br>ஒருமை, பன்மை பாகுபாடில்லை (எ.கா) வாழ்க |

**வினைமுற்று**

- நன்று - குறிப்பு வினைமுற்று

# வினைமுற்று

- அன்று - குறிப்பு வினைமுற்று
- வாழ்க - வியங்கோள் வினைமுற்று
- கேட்க - வியங்கோள் வினைமுற்று
- விடல் - அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று
- கிளத்தினேன் - தன்மை ஒருமை வினைமுற்று
- துய்ப்பேம் - தன்மைப் பன்மை வினைமுற்று
- என்ப - பலர்பால் வினைமுற்று

**வியங்கோள் வினைமுற்று**

1. வாழிய - வியங்கோள் வினைமுற்று
2. மறவற்க, துறவற்க - எதிர்மறை வியங்கோள் வினைமுற்றுகள்
3. இறப்பினை என்றும் பொறுத்தல் - 'தல்' விகுதி பெற்ற உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று
4. வென்றுவிடல் - 'அல்' ஈற்று வியங்கோள் வினைமுற்று
5. செய்தாள் என்று எள்ளல் - அல்லீற்று வியங்கோள் வினைமுற்று

**பிற வினைமுற்று**

- வையார் - எதிர்மறைப் பலர்பால் வினைமுற்று
- காண்கிலர் - எதிர்மறைப் பலர்பால் வினைமுற்று
- வைப்பர் - உடன்பாட்டுப் பலர்பால் வினைமுற்று
- வாழ்த்துவம் - தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்று
- எளிய, அரிய - பலவின்பால் குறிப்பு வினைமுற்றுகள்
- இரங்குவிர் - முன்னிலைப் பன்மை வினைமுற்று
- ஓம்புமின் - ஏவல் பன்மை வினைமுற்று
- ஊர்மதி – ஏவல் ஒருமை வினைமுற்று
- உணர்மின் - ஏவல் பன்மை வினைமுற்று
- காணீர், புகலீர் - ஏவல் பன்மை வினைமுற்று
- ஆற்றீர் - முன்னிலைப் பன்மை எதிர்மறை வினைமுற்று
- தருகுவென் - தன்மை ஒருமை வினைமுற்று
- சிந்தித்தேன் - தன்மை ஒருமை வினைமுற்று
- என்கோ – தன்மை ஒருமை வினைமுற்று
- அளிக்குவென் - தன்மை ஒருமை வினைமுற்று

**குறிப்பு வினைமுற்றுகள்**

ஆற்றல் அரிது, மாணப் பெரிது
மறப்பது நன்று, எல்லாம் உடையார்,
என்னுடையரேனும் இலர்

- தெய்வம் உற்றாள் போலும் தகையள் - குறிப்பு வினைமுற்று
- பனைத்துணையாக் கொள்வர் - பலர் வினைமுற்று
- உண்டு, இல்லை - இருதிணை ஐம்பால் மூவிடத்திற்கும் பொதுவான குறிப்பு வினைமுற்றுகள்
- மற்றைய எல்லாம் பிற – பலவின்பால் வினைமுற்று
- உள்ளப்படும் - 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று
- எய்துப – பலர்பால் வினைமுற்று
- கண்டாளைத் தான் காணான் - எதிர்மறை ஆண்பால் வினைமுற்று
- பட்டேன், உற்றேன் - இறந்தகாலத் தன்மை ஒருமை வினைமுற்றுகள்
- உறுவன், காண்பன், கேட்பன் - தன்மை ஒருமை எதிர்காலத் தெரிநிலை வினைமுற்றுகள்
- கள்வனோ அல்லன் - எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று

# வினைமுற்று

- முகம் கன்றியது – ஒன்றன்பால் வினைமுற்று
- பழுது ஒழிய எழுந்திருந்தான் - ஆண்பால் வினை முற்று
- தெரிகிலேன் - எதிர்மறைத் தன்மை ஒருமை வினைமுற்று
- அகன்றான் - ஆண்பால் வினைமுற்று
- அறியீர் - முன்னிலை எதிர்மறை வினைமுற்று
- புனைந்தோம் - தன்மைப் பன்மை வினைமுற்று
- பாடுகிறாய் - முன்னிலை ஒருமை வினைமுற்று
- உயர்ந்தோய், செறுத்தோய் - முன்னிலை வினைமுற்றுகள்


**WhatsApp Group -ல் சேர – கிளிக் செய்யவும்**

**Facebook Examsdaily Tamil – FB ல் சேர – கிளிக் செய்யவும**

**Telegram Channel கிளிக் செய்யவும்**